**லுனுகம்வெஹெர பிரதேச சபை - 2023**

-----------------------------------------------------------------

## 1. நிதிக் கூற்றுக்கள்

### 1.1 முனைப்பழியுள்ள அபிப்பிராயம்

லுனுகம்வெஹெர பிரதேச சபையின் 2023 திசெம்பர் 31 இல் உள்ளவாறான நிதி நிலைமைக் கூற்று, அத்திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான நிதிச் செயற்பாட்டுக் கூற்று, தேறிய சொத்துக்கள் மாற்றங்கள் கூற்று, காசுப்பாய்ச்சல் கூற்று, முக்கியமான கணக்கீட்டுக் கொள்கைகளினதும் ஏனைய விளக்கத் தகவல்களினதும் பொழிப்புக்களை உள்ளடக்கிய 2023 திசெம்பர் 31 இல் முடிவடைந்த ஆண்டிற்கான நிதிக்கூற்றுக்கள் 1987 இன் 15 ஆம் இலக்க பிரதேச சபைகள் அதிகார சட்டத்தின் உப பிரிவு 172(1) மற்றும் 2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச்சட்டத்தின் ஏற்பாடுகளுடன் சேர்த்து வாசிக்கப்படும் இலங்கை சனநாயக சோசலிச குடியரசு அரசியலமைப்பின் 154(1) உறுப்புரையில் உள்ளடக்கிய ஏற்பாடுகளுக்கு இணங்க எனது பணிப்பின் கீழ் கணக்காய்வு செய்யப்பட்டன. பாராளுமன்றத்திற்குச் சமர்ப்பிக்கப்பட வேண்டுமென நான் கருதுகின்ற எனது கருத்துரைகளும் அவதானிப்புகளும் இந்த அறிக்கையில் காணப்படுகின்றன.

இந்த அறிக்கையின் 1.6 ஆம் பந்தியில் விபரிக்கப்பட்ட விடயங்களின் தாக்கங்களினைத் தவிர்த்து, லுனுகம்வெஹெர பிரதேச சபையின் 2023 திசெம்பர் 31 இல் உள்ளவாறான நிதி நிலைமையினையும் அத்திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான அதனது நிதிசார் செயலாற்றலினையும் பொதுவாக ஏற்றுக்கொள்ளப்பட்ட கணக்காய்வு கோட்பாடுகளுக்கு இணங்க நிதிக்கூற்றுக்கள் உண்மையாகவும் நியாயமாகவும் தருகின்றன என்பது எனது அபிப்பிராயமாகும்.

### 1.2 முனைப்பழியுள்ள அபிப்பிராயத்திற்கான அடிப்படை

இந்த அறிக்கையின் 1.6 ஆம் பந்தியில் விபரிக்கப்பட்ட விடயங்களின் அடிப்படையில் எனது அபிப்பிராயம் முனைப்பழியுள்ளதாக்கப்படுகின்றது.

இலங்கை கணக்காய்வு நியமங்களுக்கு (இ.க.நி.) இணங்க எனது கணக்காய்வினை நான் மேற்கொண்டேன். அந்நியமங்களின் கீழான எனது பொறுப்புக்கள், இந்த அறிக்கையில் நிதிக்கூற்றுக்களின் கணக்காய்விற்கான கணக்காய்வாளரின் பொறுப்புக்கள் பந்தியில் மேலும் விபரிக்கப்படுகின்றன. எனது முனைப்பழியுள்ள அபிப்பிராயத்திற்கான அடிப்படை ஒன்றினை வழங்குவதற்கு போதியளவும் பொருத்தமானதுமான கணக்காய்வுச் சான்றுகளை நான் பெற்றுக்கொண்டுள்ளேன் என நான் நம்புகிறேன்.

### 1.3 நிதிக்கூற்றுக்களிற்கான முகாமைத்துவத்தினதும் அவ் ஆளுகைக்கு உட்பட்ட தரப்பினர்களினதும் பொறுப்புக்கள்

நிதிக்கூற்றுக்களை பொதுவாக ஏற்றுக்கொள்ளப்பட்ட கணக்கீட்டு கோட்பாடுகளுக்கு இணங்க தயாரித்து சரியாகவும் நியாயமாகவும் சமர்ப்பித்தல் மற்றும் மோசடி அல்லது தவறுகளின் காரணமாக ஏற்படக்கூடிய பொருண்மையான பிறழ் கூற்றுக்களிலிருந்து விடுபட்ட நிதிக்கூற்றுக்களைத் தயாரிப்பதற்கு அவசியமானதென முகாமைத்துவம் நிர்ணயிக்கின்ற அத்தகைய உள்ளகக் கட்டுப்பாடுகள் என்பவற்றிற்கு முகாமைத்துவம் பொறுப்பாக உள்ளது.

பிரதேச சபையின் நிதி அறிக்கையிடல் செயன்முறையை மேற்பார்வை செய்தல் அவ் ஆளுகைக்குட்பட்ட தரப்பினர்களின் பொறுப்பாக உள்ளது.

2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச்சட்டத்தின் 16(1) ஆம் உப பிரிவின் பிரகாரம் பிரதேச சபையின் வருடாந்த மற்றும் காலரீதியான நிதிக்கூற்றுக்களை தயாரிக்கக்கூடியவாறு தனது அனைத்து வருமானங்கள், செலவினங்கள், சொத்துக்கள் மற்றும் பொறுப்புக்கள் தொடர்பாக புத்தகங்கள் மற்றும் பதிவேடுகளை முறையாக பேணுதல் வேண்டும்.

## 1.4 கணக்காய்வின் விடயப்பரப்பு (நிதிக் கூற்றுக்களின் கணக்காய்வு தொடர்பான கணக்காய்வாளரின் பொறுப்பு)

ஒட்டுமொத்தமாக நிதிக்கூற்றுக்கள், மோசடி அல்லது தவறு காரணமாக ஏற்படக்கூடிய அனைத்துப் பொருண்மையான பிறழ் கூற்றுக்களிருந்து நிதிக்கூற்றுக்கள் விடுபட்டுள்ளனவா என்பதற்கான நியாயமான உறுதிப்பாட்டைப் பெற்றுக்கொள்வதும் எனது அபிப்பிராயத்தை உள்ளடக்குகின்ற கணக்காய்வாளர் அறிக்கை ஒன்றை வழங்குவதும் எனது குறிக்கோள்களாக உள்ளன. நியாயமான உறுதிப்பாடென்பது உறுதிப்பாட்டின் உயர் நிலையொன்றாக காணப்படுகின்ற போதிலும் இலங்கை கணக்காய்வு நியமங்களிற்கு இணங்க மேற்கொள்ளப்படுகின்ற கணக்காய்வில் பொருண்மையான பிறழ்கூற்றொன்று காணப்படுகையில் அதனை எல்லா வேளையிலும் கண்டுபிடிக்கும் என்பதற்கு அது உத்தரவாத்தினை வழங்குவதில்லை. பிறழ்கூற்றுக்களானவை மோசடி அல்லது தவறு காரணமாக எழக்கூடுமென்பதுடன் அவற்றுள் இந்த நிதிக்கூற்றுக்களை அடிப்படையாகக் கொண்டு பாவனையாளர்களால் மேற்கொள்ளப்படும் பொருளாதாரத் தீர்மானங்கள் மீது தனித்தனியாகவோ அல்லது கூட்டுமொத்தமாகவோ செல்வாக்குச் செலுத்தக்கூடுமென நியாயமாக எதிர்பார்க்கப்படுபவை பொருண்மையானவையாக கருத்திலெடுக்கப்படும்.

துறைசார் வெளிப்படை மற்றும் தொழில்துறை பிண்ணணியுடன் இலங்கை கணக்காய்வு நியமங்களின் பிரகாரம் என்னால் கணக்காய்வு செய்யப்பட்டன. மேலும்,

- மோசடி அல்லது தவறுகளின் காரணமாக நிதிக்கூற்றுக்களின் ஏற்படக் கூடிய பொருண்மையான பிறழ் கூற்று ஆபத்தினை இனங்காணும் போதும் மதிப்பீட்டின் போது சந்தர்ப்பத்திற்கு பொருத்தமான கணக்காய்வு நடைமுறைகளை திட்டமிடுவதன் மூலம் மோசடிகள் அல்லது தவறுகளின் காரணமாக ஏற்படக் கூடிய ஆபத்துகளை தவிர்த்துக் கொள்வதற்கும், போதுமான மற்றும் பொருத்தமான கணக்காய்வுச் சான்றுகளைப் பெற்றுக்கொள்ளல் எனது அபிப்பிராயத்திற்கு அடிப்படையாகும். தவறு ஒன்றின் மூலம் ஏற்படும் தாக்கங்களை விட மோசடி ஒன்றின் மூலம்இடம்பெறும் பொருண்மையான பிறழ் கூற்றினை இணங்காணாமையால் எழும் தாக்கம் பாரியதாக இருப்பதுடன், தவறான கூட்டிணைவு, தவறான ஆவணங்களைத் தயாரித்தல், வேண்டுமென்றே விட்டுவிடுதல் அல்லது உள்ளக கட்டுப்பாட்டை தவிர்ப்புச் செய்தல் மோசடியொன்று ஏற்படுவதற்கு காரணமாகின்றது

- சந்தர்ப்பங்களிற்குப் பொருத்தமான கணக்காய்வு நடைமுறைகளை வடிவமைப்பதற்காக உள்ளகக் கட்டுப்பாடுகள் தொடர்பான அறிவை பெற்றுக்கொள்வதற்காகவேயன்றி சபையின் உள்ளகக் கட்டுப்பாடுகளின் செயற்திறன் மீது அபிப்பிராயமொன்றை தெரிவிக்கும் நோக்கத்திற்காக அல்ல.

- பயன்படுத்திய கணக்கீட்டுக் கொள்கைகளின் பொருத்தப்பாடுகளையும் கணக்கீட்டு மதிப்பீடுகளின் நியாயத் தன்மையினையும் மற்றும் முகாமைத்துவத்தால் மேற்கொள்ளப்பட்ட தொடர்புடைய வெளிப்படுத்தல்களினையும் மதிப்பீடு செய்தல்.

- வெளிப்படுத்தல்கள் உள்ளடக்கப்பட்ட நிதிக்கூற்றுக்களின் கட்டமைப்பு மற்றும உள்ளடக்கத்திற்காக அடிப்படையான கொடுக்கல் வாங்கல்கள் மற்றும் சம்பவங்கள் பொருத்தமான மற்றும் நியாயமான வகையில் நிதிக்கூற்றுக்களில் உள்ளடக்கப்பட்டுள்ளன என மதிப்பீடு செய்தல்.

வேண்டப்பட்டவாறு எந்த நேரத்திலும் பின்வரும் விடயங்களை பரீட்சிப்பதற்கு சாத்தியமானதாக கணக்காய்வின் நோக்கெல்லை விஸ்தரிக்கப்பட்டுள்ளது.

- பிரதேச சபையின் செயற்பாடுகளை தொடர்ச்சியாக மதிப்பீடு செய்யக்கூடியவாறான தகவல்களை சமர்ப்பிக்கும் நோக்கில் அமைப்பு, முறைமைகள், நடைமுறைகள், ஏடுகள், பதிவேடுகள் மற்றும் ஏனைய ஆவணங்கள் முறையாகவும் போதுமானதாகவும் வடிவமைக்கப்பட்டிருந்தனவா என்பதுடன் அத்தகைய முறைமைகள், நடைமுறைகள், புத்தகங்கள், பதிவேடுகள் மற்றும் ஏனைய ஆவணங்கள் ஆக்கபூர்வமான செயற்பாட்டில் உள்ளனவா என்பதும்,

- உரிய எழுத்துமூல சட்டத்திற்கு அல்லது பிரதேச சபையினால் வழங்கப்பட்ட ஏனைய பொதுவான அல்லது விசேட பணிப்புரைகளுடன் பிரதேச சபை இணங்கியிருந்ததா என்பதும்,

- தனது அதிகாரங்கள், தொழிற்பாடுகள் மற்றும் கடமைகளின் பிரகாரம் செயற்பட்டிருந்ததா என்பதும், மற்றும்

- வளங்கள் கால வரையறைகளினுள்ளேயும் பொருத்தமான சட்டங்களிற்கிணங்கவும் சிக்கனமாகவும் வினைத்திறனாகவும் ஆக்கபூர்வமாகவும் கொள்வனவு செய்யப்பட்டு பயன்படுத்தப்பட்டிருந்தனவா என்பதும் ஆகும்.

### 1.5 ஏனைய சட்டத் தேவைப்பாடுகள் தொடர்பான அறிக்கை

2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச் சட்டத்தின் பின்வரும் தேவைப்பாடுகள் தொடர்பாக விஷேட ஏற்பாடுகள் அடங்கியுள்ளன.

(அ) 2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச் சட்டத்தின் 6(1)(ஈ)(iii) பிரிவில் குறிப்பிடப்பட்டுள்ள தேவைப்பாடின் படி, பிரதேச சபையின் நிதிக்கூற்றுக்கள் முன்னைய ஆண்டுடன் இணங்குகின்றன.

(ஆ) 2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச் சட்டத்தின் 6(1)(ஈ)(iv) பிரிவில் குறிப்பிடப்பட்டுள்ள தேவைப்பாடின் படி, இந்த அறிக்கையின் 1.6.1 (ஈ) அவதானிப்புக்கள் தவிர முன்னைய ஆண்டின் போது என்னால் மேற்கொள்ளப்பட்ட பரிந்துரைகள் சமர்ப்பிக்கப்பட்டுள்ள நிதிக்கூற்றுக்களில் அடங்கியுள்ளன.

### 1.6 நிதிக் கூற்றுக்கள் தயாரித்தல் தொடர்பான கணக்காய்வு அவதானிப்புக்கள்

#### 1.6.1 கணக்கீட்டுக் குறைபாடுகள்

| | கணக்காய்வு அவதானிப்புக்கள் | சபையின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|---|
| (அ) | சிட்டையிடப்பட வேண்டிய முத்திரைக் கட்டண வருமானம் ரூபா 1,266,500 தொகை மற்றும் நிலையான வைப்பு வட்டி வருமானம் ரூபா 275,874 தொகை குறைவாக கணக்கீடு செய்யப்பட்டிருந்தது. | முத்திரைக் கட்டணம் 2024 ஆண்டின் போது அட்டவணைகளின் படி சிட்டையிடப்பட்டது என மற்றும் வட்டியை சரிசெய்வதற்கு சரி செய்யப்படும் என. | வருமானங்கள் சரியாக இனங்கண்டு கணக்கீடு செய்யப்பட வேண்டும். |
| (ஆ) | உள்ளூராட்சி சேவை ஓய்வூதிய பங்களிப்பு நிதியத்திற்கு செலுத்த வேண்டிய ரூபா 869,602 இற்காக கடன்கொடுத்தோர் ஏற்பாடுகள் ஒதுக்கப்பட்டிருக்கவில்லை. | 2024 ஆண்டின் போது கடன்கொடுத்தோர் ஏற்பாடுகள் ஏற்படுத்தப்படும் என. | செலுத்த வேண்டிய செலவுகளை சரியாக இனங்கண்டு கணக்கீடு செய்யப்பட வேண்டும். |
| (இ) | திண்மக் கழிவுப் பொருள் முகாமைத்துவ நிலையத்தில் குழாய் கிணறு நிர்மாணிப்பதற்காக செலவிடப்பட்டிருந்த ரூபா 715,875 இற்கான மூலதனச் செலவுகள் காணிகள் மற்றும் கட்டிடங்களின் கீழ் கணக்கீடு செய்யாமல் இயந்திரங்கள் மற்றும் இயந்திர உபகரணங்களின் கீழ் கணக்கீடு செய்யப்பட்டிருந்தது. | 2024 ஆண்டின் போது சரி செய்யப்படும் என. | செலவுகளை சரியாக இனங்கண்டு கணக்கீடு செய்யப்பட வேண்டும். |

| | | | |
|---|---|---|---|
| (ஈ) | 2021 திசெம்பர் 31 திகதியில் உள்ளவாறு பிரதான பேரேட்டில் பேணிச் சென்றிருந்த திரண்ட நிதியக் கணக்கின் மீதி ரூபா 411,213 தொகை மிகையாக காட்டப்பட்டு நிதிக் கூற்றுக்கள் தயாரிக்கப்பட்டிருந்ததுடன் மீளாய்வாண்டின் போதும் அவற்றை சரி செய்வதற்கு நடவடிக்கை எடுக்காமல் நிதிக் கூற்றுக்கள் தயாரிக்கப்பட்டிருந்தது. | 2021 ஆண்டின் பேரேடு தயாரிக்கும் போது இத் தவறு ஏற்பட்டிருந்தது என. | திரண்ட நிதியக் கணக்கு மீதியை சரி செய்து கணக்கீடு செய்ய வேண்டும். |
| (உ) | கூட்டுப்பெறுமதி ரூபா 354,009 இற்கான 22 இருப்பு விடயங்கள் தளபாடங்கள் மற்றும் உபகரணங்களின் கீழ் கணக்கீடு செய்யப்பட்டிருந்ததுடன் ரூபா 9,800 இற்கான வீல்பரோ தளபாடங்கள் மற்றும் உபகரணங்களின் கீழ் மற்றும் நிர்மாண வேலை உபகரணங்களின் கீழ் இரண்டு தடவைகள் கணக்கீடு செய்யப்பட்டிருந்தது. | 2024 ஆண்டின் கணக்குகள் தயாரிக்கும் போது சரி செய்யப்படும் என. | சொத்துக்களின் பெறுமதி சரியாக வகைப்படுத்தி சரியாக கணக்கீடு செய்ய வேண்டும். |
| (ஊ) | 2024 ஆண்டிற்காக மேற்கொள்ளப்பட்டிருந்த ரூபா 139,026 இற்கான செலவுகள் முற்கொடுப்பனவு என கணக்கீடு செய்யாமல் மீளாய்வாண்டிற்கான செலவுகள் என கணக்கீடு செய்யப்பட்டிருந்தது. | 2024 ஆண்டில் சரி செய்யப்படும் என. | ஆண்டிற்குரிய செலவுகள் சரியாக இனங்கண்டு கணக்கீடு செய்யப்பட வேண்டும். |
| (எ) | 03 நிலையான வைப்புக்களுக்காக பெற வேண்டிய வட்டி வருமானம் ரூபா 138,189 தொகையினை கணக்கீடு செய்திருக்கவில்லை. | 2024 ஆண்டில் சரி செய்யப்படும் என. | ஆண்டிற்குரிய வட்டி வருமானம் சரியாக கணிக்கப்பட்டு கணக்கீடு செய்யப்பட வேண்டும். |

**1.7 இணங்காமை**

**1.7.1 சட்டங்கள், விதிகள், பிரமாணங்கள் மற்றும் முகாமைத்துவத் தீர்மானங்களுடன் இணங்காமை**

| சட்டங்கள் விதிகள், பிரமாணங்களுடனான தொடர்பு | | இணங்காமைகள் | சபையின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|---|---|
| (அ) | 1987 இன் 15 ஆம் இலக்க பிரதேச சபை சட்டத்தின் பிரிவு 134 (1) | சபையினால் 2015 ஆண்டின் போது இனங்கண்டிருந்த முன்னேற்றப்பட்ட பிரதேசங்களில் இருந்து வீதவரி அறவிடுவதற்கு மீளாய்வாண்டு இறுதி வரை நடவடிக்கை எடுத்திருக்கவில்லை. | 2024 ஆண்டின் போது முன்னேற்றப்பட்ட பிரதேசங்கள் என வெளியிடப்பட்ட ஒரு பிரிவில் இருந்து ரூபா 16,554 வீதவரி அறவிடப்பட்டது என. | சட்டத்தின் ஏற்பாடுகளுக்கு இணங்க செயற்பட வேண்டும். |
| (ஆ) | 1987 இன் 15 ஆம் இலக்க பிரதேச சபை சட்டத்தின் பிரிவு 132 (ஒ) | ஏதேனும் சமய, புண்ணிய, கலாச்சார, சுகாதார, பொழுதுபோக்கு அல்லது கல்விசார் கருமங்கள் தொடர்பாக ஒரு வருடத்திற்கு மொத்த கூட்டுத்தொகை ரூபா ஒரு ஆயிரத்தை மிகைக்காமல் செலவிடுவதற்காக அமைச்சரின் எழுத்துமூல பூர்வாங்க அங்கீகாரம் பெற்றுக் கொள்ள வேண்டியிருந்த இருந்த | எதிர்காலத்தில் இவ்வாறான குறைபாடுகள் ஏற்படாமல் இருப்பதற்கான நடவடிக்கை எடுக்கப்படும் என. | சட்டத்தின் ஏற்பாடுகளுக்கு இணங்க செயற்பட வேண்டும். |

| | | | | |
|---|---|---|---|---|
| | | போதிலும் சங்கீத நிகழ்ச்சித் திட்டமொன்று நடாத்துவதற்காக செலவிடப்பட்டிருந்த ரூபா 73,885 தொடர்பான அவ்வாறு அங்கீகாரம் பெற்றுக் கொண்டிருக்கவில்லை. | | |
| (இ) | இலங்கை சனநாயக சோசலிச குடியசரின் நிதிப் பிரமாணம் 260(1) | மீளாய்வாண்டின் போது 03 பல்வேறு கருமங்களுக்காக கொடுப்பனவு செய்யும் போது குறிப்பிட்ட பெறுவோனுக்கு செலுத்துவதற்கு நடவடிக்கை எடுக்காமல் சபைச் செயலாளரின் பெயரில் ரூபா 176,360 இற்கான காசோலைகள் எழுதப்பட்டு பணம் பெறப்பட்டிருந்தது. | எதிர்காலத்தில் இவ்வாறான குறைபாடுகள் ஏற்படாமல் இருப்பதற்கான நடவடிக்கை எடுக்கப்படும் என. | நிதிப் பிரமாணங்களுக்கு இணங்க செயற்பட வேண்டும். |

## 2. நிதி மீளாய்வு

### 2.1 நிதி விளைவுகள்

சமர்ப்பிக்கப்பட்டிருந்த நிதிக் கூற்றுக்களின் படி மீளாய்வாண்டு திசெம்பர் 31 திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான சபையின் மீண்டுவரும் வருமானத்தை மிகைத்த செலவு ரூபா 3,823,315 தொகையாகக் காணப்பட்டதுடன், அதற்கு நேர்மாறாக முன்னைய ஆண்டின் மீண்டுவரும் செலவை மிகைத்த வருமானம் ரூபா 910,950 தொகையாக இருந்தது.

### 2.2 வருமான நிருவாகம்

#### 2.2.1 மதிப்பீட்டு வருமானம், சிட்டையிடப்பட்ட வருமானம், சேகரிக்கப்பட்ட வருமானம் மற்றும் நிலுவை வருமானம்

| | 2023 | | | | 2022 | | | |
|---|---|---|---|---|---|---|---|---|
| **வருமான மூலம்** | **மதிப்பீட்டு வருமானம்** | **சிட்டையி டப்பட்ட வருமானம்** | **சேகரிக்க ப்பட்ட வருமானம்** | **திசெம்பர் 31 திகதியில் உள்ளவாறு மொத்த நிலுவை** | **மதிப்பீட்டு வருமானம்** | **சிட்டையி டப்பட்ட வருமானம்** | **சேகரிக்க ப்பட்ட வருமானம** | **திசெம்பர் 31 திகதியில் உள்ளவாறு மொத்த நிலுவை** |
| | ரூபா | ரூபா | ரூபா | ரூபா | ரூபா | ரூபா | ரூபா | ரூபா |
| வீதவரி மற்றும் வரி | 1,054,000 | 709,120 | 736,720 | 127,160 | 530,000 | 692,800 | 635,120 | 154,760 |
| வாடகை | 8,971,000 | 4,004,296 | 4,618,578 | 772,014 | 6,045,000 | 3,377,183 | 3,462,646 | 1,386,296 |
| அனுமதிப் பத்திரக் கட்டணம் | 1,685,700 | 1,833,050 | 2,364,900 | 863,490 | 1,348,200 | 1,720,235 | 1,790,685 | 1,395,340 |
| ஏனைய வரு மானங்கள் | 3,686,500 | 1,239,604 | 1,653,867 | 214,345 | 2,110,000 | 1,682,430 | 1,170,193 | 628,608 |
| மொத்தம் | 15,397,200 | 7,786,070 | 9,374,065 | 1,977,009 | 10,033,200 | 7,472,648 | 7,058,644 | 3,565,004 |

### 2.2.2 வருமானம் சேகரித்தல் செயலாற்றல்

| | கணக்காய்வு அவதானிப்பு | சபையின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|---|
| (அ) | மீளாய்வாண்டு திசெம்பர் 31 திகதியில் உள்ளவாறு 94 வியாபார அலகுகளில் இருந்து பெற வேண்டிய வியாபார வரி ரூபா 127,160 தொகை 2022 நவம்பர் 04 ஆந் திகதிய இலக்கம் 2305 கொண்ட வர்த்தமானி அறிவித்தலின் படி 2023 மார்ச் 31 திகதியளவிலும் அறவிடப்பட வேண்டியிருந்த போதிலும், அவ்வாறு செயற்பட்டிருக்காததுடன் நிலுவை மீதியில் முன்னைய ஆண்டிற்குரிய நிலுவை ரூபா 117,800 தொகை காணப்பட்டது. | ரூபா 5,400 தொகை அறவீடு செய்யப்பட்டு ரூபா 6,360 தொகைக்காக வழக்குத் தாக்கல் செய்யப்பட்டுள்ளதுடன் மீதித் தொகையை அறவீடு செய்வதற்கு நடவடிக்கை எடுக்கப்படும் என. | நிலுவை வருமானம் விரைவாக அறவீடு செய்யப்பட வேண்டும். |
| (ஆ) | மீளாய்வாண்டு திசெம்பர் 31 திகதியில் உள்ளவாறு சபைக்கு சொந்தமான 14 கடையறைகளில் இருந்து பெற வேண்டிய கடை வாடகை ரூபா 104,200 தொகை அறவீடு செய்வதற்கு பிரதேச சபை அதிகாரச் சட்டத்தின் பிரிவு 159(1) இற்கு இணங்க செயற்பட்டிருக்கவில்லை. | ரூபா 94,000 தொகை அறவிடப்பட்டுள்ளதுடன் மீதி நிலுவையை அறவீடு செய்ய நடவடிக்கை எடுக்கப்படும் என. | நிலுவை வருமானம் விரைவாக அறவிடப்பட வேண்டும். |
| (இ) | சபைக்கு சொந்தமான வாகனங்கள் மற்றும் இயந்திர உபகரணங்கள் முன்னைய ஆண்டுகளின் போது மற்றும் மீளாய்வாண்டின் போது பணம் அறவிடப்படாமல் கடன் அடிப்படையில் வழங்கியிருந்தமையால் மீளாய்வாண்டு திசெம்பர் 31 திகதியில் உள்ளவாறு பெற வேண்டிய மீதி ரூபா 218,700 தொகையாக இருந்தது. | ரூபா 34,850 தொகை அறவிடப்பட்டுள்ளதுடன், 2021 ஆண்டின் நிலுவையாகிய ரூபா 129,650 தொகையினை அறவீடு செய்வதற்காக சட்ட செயற்பாடுகள் எடுப்பதற்கு நடவடிக்கை எடுக்கப்படுகின்றது என. | நிலுவை வருமானம் விரைவாக அறவிடப்பட வேண்டும். |
| (ஈ) | மீளாய்வாணடு திசெம்பர் 31 திகதியில் உள்ளவாறு சபைக்கு சொந்தமான 04 ஆதனங்கள் தொடர்பாக பெற வேண்டிய வர்த்தக உரிமையை வாடகைக்கு கொடுக்கும் வாடகை ரூபா 345,778 தொகையினை அறவீடு செய்வதற்கு நடவடிக்கை எடுத்திருக்கவில்லை. | ரூபா 30,000 தொகை அறவீடு செய்யப்பட்டுள்ளதுடன் மீதியான நிலுவைத் தொகையை அறவீடு செய்வதற்கு சட்ட நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது என. | நிலுவை வருமானம் விரைவாக அறவிடப்பட வேண்டும். |
| (உ) | மீளாய்வாண்டு திசெம்பர் 31 திகதியில் உள்ளவாறு 135 வியாபார அலகுகளிலிருந்து பெற்றுக்கொள்ள வேண்டிய ரூபா 120,000 தொகைக்கான வர்த்தக அனுமதிப்பத்திரக் கட்டணத்தை அறவீடு செய்வதற்கு நடவடிக்கை எடுத்திருக்காததுடன் பிரதேச சபைச் சட்டத்தின் 122(2) பிரிவின் பிரகாரம் சபையினால் நடவடிக்கை எடுத்திருக்கவில்லை. | ரூபா 3,000 அறவீடு செய்யப்பட்டுள்ளதுடன், ரூபா 7,500 தொகைக்காக வழக்குத் தாக்கல் செய்யப்பட்டுள்ளதுடன் மீதி நிலுவைத் தொகையை அறவீடு செய்வதற்கு நடவடிக்கை எடுக்கப்படும் என. | நிலுவை வருமானம் விரைவாக அறவிடப்பட வேண்டும். |
| (ஊ) | சபையின் அதிகாரப் பிரதேசத்தில் காட்சிப்படுத்தப்பட்டிருந்த அறிவித்தல் பலகைகளிலிருந்து காலரீதியாக கட்டணம் | ரூபா 52,000 இனை அறவிடப்பட்டுள்ளதுடன் ரூபா 460,090 இற்கான | நிலுவை வருமானம் விரைவாக அறவிடப்பட வேண்டும். |

| | |
|---|---|
| அறவிடப்பட்டிருக்காததுடன் மீளாய்வாண்டு திசெம்பர் 31 திகதியில் உள்ளவாறு 26 நிறுவனங்களிலிருந்து பெற வேண்டிய அறிவித்தல் பலகைக் கட்டணம் ரூபா 743,490 தொகை அறவீடு செய்வதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை. | தொகையினை அறவீடு செய்வதற்காக சட்ட நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது என. |

## 3. செயற்பாட்டு மீளாய்வு

பிரதேச சபை அதிகாரச் சட்டத்தின் 3 ஆம் பிரிவின் கீழ் பொது மக்கள் சுகாதாரம், பொதுப் பயன்பாட்டு சேவைகள் மற்றும் பகிரங்க பொது வழிகள் தொடர்பான விடயங்களை முறைப்படுத்துதல் மற்றும் நிருவகித்தல் பொது மக்களின் சுகபோகம், வசதி மற்றும் நலன்புரி ஆகிய சபையினால் நிறைவேற்றப்பட வேண்டிய பணிகளை நிறைவேற்றுதல் தொடர்பாக அவதானிக்கப்பட்ட விடயங்கள் கீழே காண்பிக்கப்படுகின்றன.

### 3.1 முகாமைத்துவ திறமையின்மை

| | கணக்காய்வு அவதானிப்பு | சபையின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|---|
| (அ) | நிர்மாணிப்பதற்காக அங்கீகரிக்கப்பட்டிருந்த 03 வர்த்தக கட்டிட வரைபுகள் அங்கீகரிக்கப்பட்ட அலகை மிகைத்து நிர்மாணிக்கப்பட்டிருந்த சதுரமீற்றர் தொகைக்காக அணவல் அங்கீகாரம் பெற்றுக்கொடுத்தல் மற்றும் ஒழுங்குபடுத்தல் கட்டணம் மற்றும் இணக்கச் சான்றிதழ் கட்டணம் முறையே ரூபா 202,967 தொகை மற்றும் ரூபா 10,000 தொகை அறவீடு செய்திருக்கவில்லை. | திருத்தப்பட்ட வரைபுகள் சமர்ப்பிக்கப்பட்டு அங்கீகாரம் பெற்றுக் கொள்ளும் படி நிர்மாணிப்பவர்களுக்கு அறிவிக்கப்பட்டது என. | குறித்த கட்டணத்தை அறவிட்டு திருத்திய வரைபினை அங்கீகரிக்க வேண்டும். |
| (ஆ) | நிர்மாண வேலைகள் பூர்த்தி செய்யப்பட்டிருக்காத செல்லுபடியாகும் காலத்தை மிகைத்துள்ள 11 வர்த்தக கட்டிடங்கள் குறிப்பிட்ட வரைபுகளின் காலத்தை நீடிப்பு செய்து ரூபா 55,000 இற்கான கட்டணம் மற்றும் அங்கீகரிக்கப்பட்ட இரண்டு கட்டிய வரைபுகள் மற்றும் எல்லை மதில் நிர்மாணித்தல் தொடர்பாக நிர்மாண வேலைகள் பூர்த்தி செய்யப்பட்டிருந்த போதிலும் அவற்றை பரிசோதனை செய்து இணக்கச் சான்றுதல் வழங்கி ரூபா 15,000 இற்கான கட்டணம் அறவீடு செய்வதற்கு நடவடிக்கை எடுத்திருக்கவில்லை. | 06 வரைபுகளின் காலம் தற்போது நீடிக்கப்பட்டுள்ளதுடன் ஏனைய 05 வரைபுகளின் காலத்தையும் நீடித்துக் கொள்ளும் படி குறிப்பிட்ட நபர்களுக்கு அறிவிக்கப்பட்டது என. | செல்லுபடியாகும் காலத்தை நீடிக்கும் கட்டணம் மற்றும் இணக்கச் சான்றிதழ் கட்டணம் அறவீடு செய்வதற்கு நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும். |

### 3.2 செயற்பாட்டுத் திறமையின்மை

| கணக்காய்வு அவதானிப்பு | சபையின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|
| 2023 ஆண்டின் தொழில்கள் தொடர்பாக கணிப்பீட்டின் போது இனங்கண்டிருந்த 24 வியாபார அலகுகளுக்காக சுற்றாடல் அனுமதிப்பத்திரம் வழங்கியிருக்காமையால் சபைக்கு உழைக்கக் கூடியதாக இருந்த ரூபா 105,000 இற்கான வருமானமொன்றை இழந்துள்ளது. | சுற்றாடல் பாதுகாப்பு அனுமதிப்பத்திரம் வழங்குவதற்கு நடவடிக்கை எடுக்கப்படும் என. | வியாபார நிலையங்களுக்கு சுற்றாடல் அனுமதிப்பத்திரம் பெற்றுக் கொள்வதற்காக ஊக்குவிக்க வேண்டும். |

### 3.3 சொத்துக்கள முகாமைத்துவம்

| | கணக்காய்வு அவதானிப்பு | சபையின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|---|
| (அ) | சபைக்கு சொந்தமான 87 காணிகளின் சட்டபூர்வமான உரிமையை சபைக்கு உரித்தாக்குவதற்கு நடவடிக்கை எடுத்திருக்கவில்லை. | காணியை உரித்தாக்கும் அலுவல்களுக்காக நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது என. | காணிகளின் சட்டரீதியான உரிமையை உறுதிப்படுத்த வேண்டும். |
| (ஆ) | முன்னைய ஆண்டின் போது ஓட்ட நிலையிலிருந்து அகற்றப்பட்டிருந்த 04 வாகனங்களை திருத்த வேலை மேற்கொண்டு பயன்படுத்துவதற்கு அல்லது அப்புறப்படுத்துவதற்கு சபையினால் நடவடிக்கை எடுத்திருக்கவில்லை. | பரிந்துரை பெற்றுக் கொள்வதற்காக விஷேட கணிப்பீட்டுச் சபை ஒன்று நியமிக்கப்பட்டுள்ளதுடன் பரிந்துரை கிடைத்த பின்னர் தொடர்நடவடிக்கை எடுக்கப்படும். | சொத்துக்களை திருத்த வேலை மேற்கொள்வதற்கு அல்லது அப்புறப்படுத்துவதற்கு நடவடிக்கை எடுக்க வேண்டும். |

### 3.4 செயற்திட்டங்கள், கருமங்கள் அல்லது மூலதன வேலைகள் நிறைவேற்றுவதில் தாமதங்கள்

| கணக்காய்வு அவதானிப்பு | சபையின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|
| 2023 ஆண்டிற்கான பாதீட்டில் உள்ளடங்கிய கூட்டுப் பெறுமதி ரூபா 1,300,000 இற்கான 03 அபிவிருத்தித் திட்டங்கள் மீளாய்வாண்டின் போதும் செயற்படுத்துவதற்கு நடவடிக்கை எடுத்திருக்கவில்லை. | சபையின் கணக்குகளில் போதியளவு பணம் காணப்படாமையால் செயற்திட்டத்தை செயற்படுத்துவதற்கு முடியாமல் போனது என. | பாதீட்டின் மூலம் ஏற்பாடுகள் ஒதுக்கப்பட்டிருந்த அபிவிருத்தித் திட்டங்கள் செயற்படுத்தப்பட வேண்டும். |

### 3.5 பெறுகை முகாமைத்துவம்

| கணக்காய்வு அவதானிப்பு | சபையின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|
| 2006 அரச பெறுகை வழிகாட்டல் கோவை மற்றும் 1988 பிரதேச சபை (நிதி மற்றும் நிருவாகம்) விதி 177 இற்கு இணங்க கூறுவிலைகள் அழைக்கப்படாமல் 13 சந்தர்ப்பங்களில் கூட்டுத்தொகை ரூபா 572,355 தொகை பண்டங்கள் மற்றும் சேவைகள் கொள்வனவு செய்யப்பட்டிருந்தது. | இவ்வாறான குறைபாடுகள் எதிர்காலத்தில் ஏற்படாதவாறு நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது என. | பெறுகை வழிகாட்டல் கோவையின் ஏற்பாடுகள் மற்றும் விதிகளுக்கு இணங்க செயற்பட வேண்டும். |

### 3.6 ஒப்பந்த நிருவாகத்தில் குறைபாடுகள்

| | கணக்காய்வு அவதானிப்பு | சபையின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|---|
| (அ) | அக்குரஸ்ஸ வீட்டிற்கு அண்மையில் முச்சந்தியில் மதகு மறுசீரமைக்கும் வேலையின் நிர்மாண அலுவல்களுக்காக கொடுப்பனவு செய்யும் போது பாதையை சரளை மண் பயன்படுத்தி தகர்த்து அடர்த்தி செய்யும் கருமத்திற்காக ரூபா 80,104 தொகை மற்றும் ரூபா 10,623 தொகை தாமதக் கட்டணம் அறவீடு செய்திருக்கவில்லை. | மிகையாக செலுத்தியிருந்த தொகையில் ரூபா 27,857 தொகை அறவீடு செய்யப்படும் எனவும் தாமதக் கட்டணம் தடுத்து வைத்தல் பணத்திலிருந்து அறவீடு செய்யப்படும் எனவும் | மிகையாக செலுத்திருந்த தொகை மற்றும் தாமதக் கட்டணம் அறவீடு செய்யப்பட வேண்டும். |

| | | | |
|---|---|---|---|
| (ஆ) | முதுமால ஆலையின் முன்பக்கமாக காணப்படும் பாதையின் தென் பகுதியிலுள்ள இரண்டாவது ஒழுங்கையின் மதகு தயாரிக்கும் வேலை குறிப்பிட்ட கொடுப்பனவு அறிக்கையில் வேலை விடயம் 1.2 இன் கீழ் மதகுக்கு இரு பக்கமாகவும் மண் போடப்பட்டு தகர்க்கப்படல் மற்றும் பாதையின் 30 மீற்றர் நீளத்திற்கு மண் போடப்பட்டு தகர்த்து திண்மம் அடையச் செய்தலுக்காக ரூபா 67,089 தொகை மிகையாக உட்படுத்தப்பட்டிருந்ததுடன், தாமதக் கட்டணம் ரூபா 2,164 அறவீடு செய்திருக்கவில்லை. | மிகைக் கொடுப்பனவு ரூபா 23,333 தொகை மற்றும் தாமதக் கட்டணம் ரூபா 2,164 தொகை அறவீடு செய்வதற்கு நடவடிக்கை எடுக்கப்படும் என. | மிகைக் கொடுப்பனவு மற்றும் தாமதக் கட்டணம் திருப்பி அறவீடு செய்யப்பட வேண்டும். |
| (இ) | சபையினால் செயற்படுத்தப்பட்டிருந்த 02 நிர்மாண வேலை தொடர்பாக மதகின் இரு மருங்கிலும் மண் நிறைக்கப்பட்டு தகர்த்து திண்மமாக்கல் மற்றும் பாதையை அபிவிருத்தி செய்தல் கருமங்களுக்காக சரியான கூறுவிலைகளை பயன்படுத்தாமல் மதிப்பீடு தயாரிக்கப்பட்டு கொடுப்பனவு செய்வதற்காக பில் பத்திரங்கள் தயாரிக்கப்பட்டிருந்தமையால் ரூபா 73,088 தொகை மிகையாக பில் பண்ணப்பட்டிருந்தது. | மிகைக் கொடுப்பனவு ரூபா 20,818 தொகை அறவீடு செய்யப்படும் என. | மிகைக் கொடுப்பனவு தொகையினை மீண்டும் அறவீடு செய்யப்பட வேண்டும். |

## 3.7 மனிதவள முகாமைத்துவம்

| கணக்காய்வு அவதானிப்பு | சபையின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|
| சபையின் அங்கீகரிக்கப்பட்ட மற்றும் உள்ளவாறான பதவியணி முறையே 45 மற்றும் 55 ஆகக் காணப்பட்டமையால் 06 பதவிகளுக்குரிய 14 மிகைகளை முறைப்படுத்திக் கொள்வதற்கு மீளாய்வாண்டின் போதும் நடவடிக்கை எடுத்திருக்கவில்லை. | மிகைப் பதவிகளை அங்கீகரித்துக் கொள்வதற்காக வேண்டப்பட்ட போதிலும் அங்கீகாரம் கிடைக்கவில்லை என. | பதவியணி மிகைகளை முறைப்படுத்துவதற்கு நடவடிக்கை எடுக்க வேண்டும். |